குச்சவெளி பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்டம்பர் 15 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 13 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 திசெம்பர் 18 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குச்சவெளி பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் படி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் ரூபா 23,987,664 மொத்த செலவில் வீதிகள் மற்றும் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இத்தொகை நிறுவனத்தின் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்ட பணம் முழுவதும் மீளப்பெறப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் மீதிகள் இல்லாதிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்பு மீதியாக ரூபா 5,640,715 தொகை காட்டப்பட்டுள்ளது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 32 ஆண்டுகளுக்கு முன்னர் கடமையை விட்டு விலகிய 05 ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணை வைப்பு ரூபா 8,500 கூட்டுமொத்த தொகையை மீளளிப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடமையை விட்டு விலகிச் சென்ற மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 08 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 183,360 தொகையை அறவிடுவதற்கு 03 தொடக்கம் 06 ஆண்டுகள் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ரூபா 7,591 தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணமாக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இனங்கண்டு கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2001 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குரிய செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் ரூபா 457,193 தொகையை கொடுத்துத் தீர்ப்பதற்கோ அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்டிட நிர்மானம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,030,026 கூட்டு மொத்த தொகையை உரியவர்களுக்கு கொடுத்துத் தீர்ப்பதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டில் தொங்கல்கணக்கு வரவு மீதியாக ரூபா 27,035,150 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. இதனை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணிகளும் கட்டடங்களும் | 88,435,189 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள், இயந்திரங்கள் | 4,153,599 | நிலையான சொத்துப் பதிவேடுகள், |

| | | |
|---|---|---|
| தளபாடங்கள் | 4,299,759 | மெய்மையாய்வுச் சபைஅறிக்கைகள் |
| மோட்டார் வாகனம் | 785,993 | |
| பணியாளர் கடன், அரசிறைக் கடனாளிகள் | 23,661,868 | காலப்பகுப்பாய்வு, விபரப்பட்டியல் |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 5,369,158 | |
| கடன்பட்டோர் | 1,763,247 | |
| மீளளிக்கப்படாத வைப்புக்கள் | 22,420,504 | |

1.3.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

| | |
|---|---|
| (i) நி.பி. 571 (2),(3) | 1996ஆம் ஆண்டு தொடக்கம் அரசிறை பேரிலான வைப்பு ரூபா 156,650 நிதிக்கூற்றுக்களில் 17 ஆண்டுகளாக காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) மாகாணநிதி ஒழுங்கு விதிகள்

---

| | |
|---|---|
| (i) PFR 230 | காசோலை மூலம் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் வங்கி மீதி போதுமானதாக உள்ளதென கொடுப்பனவு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திய பின்னரே காசோலை எழுத வேண்டிய போதிலும் கடந்த 02 ஆண்டுகளாக காசேட்டு மீதி செலவு மீதியாக இருப்பதனைக் கவனத்தில் கொள்ளாது காசோலைகள் எழுதப்பட்டு வருவதுடன் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 1,556,565 செலவு மீதியாகக் காணப்பட்டது. |
| (ii) PFR 237 | ஆறு மாதங்களிற்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா 142,024 கூட்டு மொத்த பெறுமதியான 12 காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமா்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடா்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) PFR 365.1 | மீளாய்வாண்டிற்கான பொருட் கணக்கெடுப்பானது கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 02 வரை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 16,197,286 விளைவித்திருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 15,328,480 விளைவித்திருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 868,806 முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

---

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

---

சபையினால் சமா்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடா்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2014 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 60,003 | 10,997 | 5,905 |
| வாடகை | 6,210 | 2,438 | 2,931 |
| சேவைகளுக்கான கட்டணம் | 4,822 | 188 | - |
| அரசிறை வருமானம் | 17,112 | 25,104 | 2,431 |
| ஏனைய வருமானங்கள் | 22,524 | 9,244 | 458 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 12 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக சபையினால் கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை வருடாந்தம் ரூபா 36,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபையினால் புல்மோட்டையில் ரூபா 18,687,391 செலவில் 35 கடைகள் கொண்ட சந்தைக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஜூன் 18 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கு நீர் மற்றும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படாததனாலும் கடைகளுக்கு முன்கதவுகள் பொருத்தப்படாததனாலும் அச்சந்தைக் கடைகள் இன்றுவரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. மேலும் இச் சந்தைக் கட்டிடமானது புல்மோட்டை வாவியில் மண் நிரப்பப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட போதிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 19 வாகனங்கள் எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் 574 களஞ்சியப் பொருட்களும் 1,574 நூலகப் புத்தகங்களும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) பொது நிர்வாக அமைச்சின் 15/2001 இலக்க 2001 ஆகஸ்ட் 07ஆந் திகதிய மற்றும் 09/2009 இலக்க 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலைப் பதிவதற்காக நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட போதிலும் அது இன்றுவரை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 ஆம் ஆண்டில் புல்மோட்டை அகதிமுகாமில் தங்கியிருந்தவர்களுக்காக சபையினால் மீள்குடியேற்ற அமைச்சு சார்பாக மேற்கொண்ட நலன்புரிச் சேவைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா.2,354,448 தொகை அந்த அமைச்சிடமிருந்து இன்று வரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2006ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத 05 காசோலைகளின் ரூபா 15,605 கூட்டு மொத்த தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) குழாய் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக நலன்புரிச் சங்கங்களுக்கு 2013 ஆம் ஆண்டில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 600,000 தொகையை மீளப்பெறுவதற்கு சபையினால் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 ஆம் ஆண்டு சபைத் தலைவருக்கு பிரயாண முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 10,000 இன்று வரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 | -- |
| உதவியாளர்கள் | 27 | 19 | 08 | -- |
| சிற்றூழியர்கள் | 36 | 59 | -- | 23 |
| ஏனையவர்கள் | 08 | 14 | -- | 06 |

முகாமைத்துவ சேவை அதி விசேட தரம் I இற்கான பதவி ஒன்று கடந்த 06 வருட காலமாகவும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 08 பதவிகள் கடந்த 04 வருட காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்;ராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்;ராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு